
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1197

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

63

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## தி.மு.க.வின் சிங்க சிப்பாய்!

*1977*-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 12 ஆண்டுகள் தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. திரைப் புகழையே பெரும் முதலீடாகக் கொண்டு வாக்குகளைப் பெற்று ஆட்சியில் அமர்ந்த எம்.ஜி.ஆரின் அரசு, டெல்லியின் ஆதிக்கங்களை எதிர்க்கும் துணிச்சலையோ மாநில உரிமைகளைக் காக்கும் சுயாட்சிக் கொள்கைகளையோ துளியும் கொண்டிருக்க வில்லை. ஆனாலும், எதிர்க்கட்சியாக இருந்து அந்த ஆபத்துகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் காலகட்டத்தில், சட்டமன்றத்தில் தங்களது பேச்சாற்றலால் எம்.ஜி.ஆர். அரசுக்குக் கடும் நெருக்கடி ஏற்படுத்திய தி.மு. கழக உறுப்பினர்களில் மிக முக்கியமானவர்கள் ரகுமான்கான், துரைமுருகன், க.சுப்பு. ‘இடி, மின்னல், மழை’ என மூவரையும் வர்ணித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அதில் இடிமுழக்கமாக முழங்கியவர் ரகுமான்கான்.

### இளைய சமுதாயத்தின் குரல்

தேனி மாவட்டம், கம்பத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் ரகுமான்கான். மாணவப் பருவத்திலேயே திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் தீயாய்ச் செயல்பட்டார். ரகுமான்கானின் கம்பீரமான உரைகள் பெரியார், அண்ணா காதுகளையும் எட்டி, கவனம் பெறச் செய்தன.

முன்னாள் சபாநாயகர் காளிமுத்து, கவிஞர் நா.காமராசன், முன்னாள் துணை வேந்தர் அ.ராமசாமி ஆகியோருடன் மாணவப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு, தாய் மொழியாம் தமிழைக் காக்க தன்னை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திக் கொண்டவர் ரகுமான்கான். சட்டக் கல்லூரியில் துரைமுருகன், முரசொலி செல்வம், முன்னாள் ஒன்றிய அமைச்சர் வேங்கடபதி போன்ற கொள்கை உறுதி படைத்த முன்னோடிகளுடன் இணைந்து செயல்பட்டவர். காலில் சக்கரம் கட்டியதைப் போல தி.மு.க. மாணவர் அணியில் செயல்பட்டு, தமிழ்நாட்டின் இளைய சமுதாயத்தை, திராவிட அரசியலின் திசை வழிப்போக்கில் பயணிக்கச் செய்ய பாடுபட்டவர்களில் ஒருவர்.

சட்டம் படித்துவிட்டு சென்னை வந்தவர், வழக்கறிஞர் தொழிலுடன் கட்சிப் பணிகளிலும் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டார். தலைவர்கள் வருவதற்கு முன்பு பேசக்கூடிய பேச்சாளர் வாய்ப்பை நல்வாய்ப்பாகப் பயன்படுத்தி, தனது பேச்சாற்றல் திறமையை வெளிச்சம்போட்டுக் காட்டினார். அவரது பேச்சாற்றல் கலைஞரையும் வெகுவாக ஈர்த்தது. மிகக் குறுகிய காலத்திலேயே கழகத்தின் சிறுபான்மைச் சமூக முகங்களில் முக்கியமான முதன்மை முகமாக மாறினார் ரகுமான்கான். முத்தமிழறிஞர் கலைஞரின் நேசத்திற்குரிய உடன்பிறப்பானார். ‘என்ன பாய்’ என்று கலைஞரால் அழைக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட கழகத்தின் தூண். ‘முரசொலி’யில் வெளியான இவருடைய கட்டுரைகளைக் கலைஞர் மிகவும் ரசித்துப் படித்து, மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வார். அந்த அளவுக்குச் சிறந்த பேச்சாளராக மட்டுமன்றி, எழுத்தாளராகவும் வலம் வந்தவர்.

ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராகவும் ஒரு முறை அமைச்சராகவும் திறம்பட பணியாற்றியவர். குறிப்பாக, இன்றையக் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து இருமுறை வென்றுள்ள சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி, இதற்கு முன்பு சேப்பாக்கம் தொகுதியாக இருந்தது. அந்த சேப்பாக்கம் தொகுதியில், 1977, 1980 மற்றும் 1984 ஆகிய ஆண்டுகளில் போட்டியிட்டு ஹாட்ரிக் வெற்றி பெற்றவர். 1989-இல் சென்னை பூங்கா நகர், 1996-இல் ராமநாதபுரம் தொகுதிகளில் போட்டியிட்டு வென்றவர். இப்படி 5 முறை எம்.எல்.ஏ.வாகப் பதவி வகித்த ரகுமான்கான், 1996-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் தொழிலாளர் நலத்துறை அமைச்சரானார். தி.மு.க.வின் தலைமைச் செய்தித் தொடர்பாளராக இருந்தார். தமிழ்நாடு அரசின் சிறுசேமிப்புத் திட்ட ஆலோசனைக் குழுவின் துணைத்தலைவராக இருமுறை பதவி வகித்தார்.

1999-ஆம் ஆண்டு தேர்தலில், மத்தியில் ஒரு நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதையும் மாநில நலனையும் முன்னிறுத்தி பா.ஜ.க.வுடன் கழகம் கூட்டணி வைத்தது. இன்றுவரை கழகத்தை விமர்சிக்க, எதிரிகள் இதை ஆயுதமாகப் பயன்படுத்தத் தயங்குவதில்லை. ஆனால், ‘அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் விவகாரத்தை அரசாங்கத்தின் கொள்கையாகவோ, தேர்தல் முன்னுரிமையாகவோ மாற்றக்கூடாது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப் பட்டிருந்த சிறப்பு அந்தஸ்தை (ARTICLE - 370) நீக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. இந்தியாவில் அனைத்து மதத்தினருக்கும் ஒரே மாதிரியான பொது சிவில் சட்டத்தை (Uniform Civil Code) அமல்படுத்தும் திட்டத்தைக் கைவிட வேண்டும்’ என்ற மூன்று முக்கிய நிபந்தனைகளை விதித்துதான் கழகம், அப்போது கூட்டணி வைத்தது. கூட்டணியில் இருந்த காலகட்டத்தில், தி.மு.க.வின் நிபந்தனைக்கு இணங்கி இதனைச் செயல்படுத்தவும் அன்றைக்கு பா.ஜ.க. துணியவில்லை. அப்போது, பா.ஜ.க. கூட்டணியால் சிறுபான்மைச் சமூகங்கள் அச்சப்படாமல் இந்தக் காரணங்களை விளக்கி, கழகத்துக்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்குமான பிணைப்பை, சிறு விரிசலும் இல்லாமல் காத்தவர் ரகுமான் கான்.

2002-ஆம் ஆண்டுக்குப் பிறகு, முதுமை காரணமாகத் தீவிர களப்பணிகளில் இருந்து சற்று விலகியிருந்தாலும், இறுதி மூச்சு வரை கழகமே உயிராய் வாழ்ந்தவர். மரணப் படுக்கையில் இருந்த நாள் வரை கழகத்தின் எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்காமல் இருந்ததில்லை. முத்தமிழறிஞர் மறைந்த பின்பு, இன்றைய கழகத் தலைவருக்கு உற்றத் துணையாக நல் வழிகாட்டியாகத் திகழ்ந்தார் ரகுமான்கான். 2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20-ஆம் நாள், கொரோனா காலகட்டத்தில், இதய பாதிப்பு காரணமாக அவர் மறைந்தபோது கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கை, ரகுமான்கான் பிரிவின் இழப்பை, துயரை ஈடுசெய்ய முடியாது என்பதைக் கடைக்கோடி தொண்டனுக்கும் உணர்த்தியது.

போர்வாளான ‘முரசொலி’யில், ‘**இனி ரகுமான்கான் எழுதும் கட்டுரைகளை எங்கு போய்த் தேடிப் படிப்பேன்?**

**நான் எடுக்கும் நடவடிக்கைகளை அவ்வப்போது தொலைபேசியில் அழைத்துப் பாராட்டுவாரே, அவரின் குரலை இனி எங்குதான் கேட்பேன்?**

**அவர் அளித்தது போன்ற அற்புதமான ஆலோசனைகளை இனி யாரிடம் பெறுவேன்?**

**ஆற்றல் மிக்க - அன்பு மிக்க - இந்த இயக்கத்தின் ஆணிவேர்களில் ஒருவரை இழந்து பரிதவிக்கிறேன்; இயக்கத் தோழர்களுக்கு ஆறுதல் சொல்ல இயலாமல் தத்தளித்து நிற்கிறேன்.**

**அவரின் மூச்சு நின்று இருக்கலாம். ஆனால், அவரின் ‘முரசொலி’ கட்டுரைகளும் முழங்கிய மேடைப் பேச்சுகளும் என்றும் நம் கண்களிலே இருக்கும்; காதுகளிலே ஒலித்துக்கொண்டேயிருக்கும்**’ என உணர்வு பூர்வமான இரங்கல் மூலம் கண்ணீர் வடித்தார் கழகத் தலைவர்.

மூன்று நாட்களுக்குத் தி.மு.க. அமைப்புகள் அனைத்தும் கழகக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறும், கழகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் மூன்று நாட்களுக்கு ஒத்தி வைக்குமாறும் அறிவுறுத்தி, துயரில் இருந்து மீள தொண்டர்களை ஆசுவாசப்படுத்தினார்.

ரகுமான்கான் உடலால் மறைந்திருந்தாலும், அவரது ஆற்றல் மிகு பேச்சுகளும் அறிவார்ந்த கட்டுரைகளும், உறுதிமிக்க அவரது செயல் பாடுகளும் அவரை நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.



> **“திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் தீயாய்ச் செயல்பட்டார். ரகுமான்கானின் கம்பீரமான உரைகள் பெரியார், அண்ணா காதுகளையும் எட்டி, கவனம் பெறச் செய்தன.”**

...நீளும்

## அரசின் ஜோதிட சாய்மானம், அவமானம்!

தமிழ்நாட்டு மாநில முதலமைச்சரின் ஆலோசனை அதிகாரியாக, ஒரு ஜோதிடர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முகநூலில் பதிவிட்டுள்ள கருத்து, அரசின் தெளிவற்ற போக்கினைக் கேள்வி எழுப்பியுள்ளது. அவரது முகநூலில் இருந்து...

“தமிழ்நாட்டில் சமூக அரசியல் அடையாளங்களாக மாநில உரிமை, சமூக நீதி, மதச்சார்பின்மை என்ற மூன்று கோட்பாடுகள் உள்ளன. காமராசர் ஆட்சிக்காலத்தில் இருந்து தி.மு.க. – அ.தி.மு.க. ஆட்சி வரை இதுதான் தமிழ்நாட்டு அரசியலின் அடிப்படைக் கொள்கை. ஜெயலலிதா ஒரு பார்ப்பனராக இருந்தாலும்கூட, இந்து மதக் கொள்கையில் அவருக்கு ஈடுபாடு இருந்தாலும், மாநில உரிமை சமூக நீதிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார்.

இந்திய தேசியக் கட்சியான காங்கிரஸ், ஒரு காலத்தில் இட ஒதுக்கீடு கொள்கையை ஏற்க மறுத்தது. மதச்சார்பின்மைக் கொள்கையையும் ஏற்க மறுத்து, பார்ப்பனியக் கட்சியாகவே திகழ்ந்தது. சோனியா காந்தி தலைமையின் கீழ் காங்கிரஸ் கட்சி வந்ததற்குப் பிறகு, அதில் பண்பு மாற்றங்கள் ஏற்பட்டன. மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலத்தில்தான், தி.மு.க.வின் வற்புறுத்தல் காரணமாக மண்டல் பரிந்துரையில் கல்விக்கான இட ஒதுக்கீட்டு உரிமைக்கான சட்டம் கொண்டுவரப்பட்டது. பா.ஜ.க.வின் தலைவர் ஆன வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, அந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த தி.மு.க.வின் நிர்பந்தம் காரணமாக, பா.ஜ.க. ஆட்சியின் செயல் திட்டங்கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டன. ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு நிலைமை தலைகீழாக மாறியது. ஒற்றை ஆட்சியை நோக்கி, அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில், மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த ‘திராவிட மாடல் ஆட்சி’ ஒன்று மட்டுமே இந்த ஆதிக்கத்தை எதிர்த்து, துணிவுடன் களத்தில் நின்று போராடியது. இப்போது தமிழ்நாட்டில் தி.மு.க. – அ.தி.மு.க. இல்லாமல் முதல் முறையாகப் புதிய கட்சிக்கு மக்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள் . பா.ஜ.க.வின் பக்கம் முதல்வர் விஜய் சாய விரும்பவில்லை என்பதற்கான அறிகுறிகள் இப்போது தென்பட்டாலும், எதிர்காலத்தில் இவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மு.க.ஸ்டாலின் போல் உறுதியாக எதிர்த்து நிற்பாரா என்ற கேள்வியும் எழுகிறது” என்று குறிப்பிட்டுள்ளார். இருக்க வாய்ப்பில்லை என்பதைத்தான், அரசின் ஜோதிட சாய்மானங்கள் சொல்கின்றன.

## ஃப்ளாஷ்பேக்



ஆண்டாள் பிரியதர்ஷினி



### தலைவரின் வார்த்தையே என் வாழ்க்கை!

2010-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் தேதி, தளபதி அவர்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றபோது, எனது ஐந்து நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினார். ‘நான் வல்லினம்’ என்ற என் கவிதை நூல் குறித்துப் பேசியபோது, “ஆணோ பெண்ணோ, யாராக இருந்தாலும் மெல்லினமாகவோ வல்லின மாகவோ இருக்கலாம். எல்லாவற்றையும்விட, நல்லினமாக இருப்பதே முக்கியம்” என்றார். ‘நானும் இன்னொரு நானும்’ என்ற திருநங்கைகள் குறித்த கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டு, திருநங்கையர்களுக்கு அளிக்கப்பட்ட நலத்திட்டங்கள் பலவற்றையும் பட்டியலிட்டார். “சகோதரி, ஆண்டாள் அரசியலுக்கு வந்து மக்கள்பணி ஆற்ற வேண்டும்” என்ற அவரது உரையை நனவாக்குவது போல, இப்போது கழகப் பணியில் நானும் என்பது என் வாழ்வியல் பெருமை.

**– கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி,**
**மாநிலத் துணைத் தலைவர்,**
**கழக மக்கள் செய்தித் தொடர்புக் குழு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தமிழர் படை!

1938 ஆகஸ்ட் 1-ஆம் தேதி, சீருடை அணிந்த 100 தொண்டர்களைக் கொண்ட இந்தி எதிர்ப்புத் தமிழர் படை, திருச்சி உறையூரில் இருந்து சென்னை நோக்கிப் புறப்பட்டது. பட்டுக்கோட்டை அழகிரி, மூவலூர் இராமாமிர்தத் தம்மையார், ஐ.குமாரசாமி பிள்ளை ஆகியோர் தலைமையில் புறப்பட்ட இந்தத் தமிழர் படை, வழியெங்கும் கூட்டங்கள் நடத்தி, ஏறத்தாழ 400 கி.மீ. தொலைவை 42 நாட்கள் நடந்தே கடந்து வந்தது. திருவல்லிக்கேணி கடற்கரையில், இவர்களுக்கு ஆரவாரமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900